Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 29, 2024

திங்கட்கிழமை ஜனவரி 29, 2024 | ஒளி: 10 கதிர் 181 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## மானிய விலையில் தேயிலை உரம்



தேயிலை செய்கையின் விளைச்சலை அதிகரிக்க மானிய விலையில் தேயிலை உரம் வழங்குவதற்கான ஒப்பந்தம் திங்கட்கிழமை (29) கைச்சாத்திடப்படவுள்ளது.

லங்கா உரக் கம்பனியும், வர்த்தக உரக் கம்பனியும், தேயிலை சபை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு பத்தரமுல்ல விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நடைபெறவுள்ளது.

தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் அனைத்து T-750, T-709 மற்றும் T-200 உரங்களின் விலையை 2,000 ரூபாவினால் குறைக்க விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு "முதுகெலும்பு இல்லை"



பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது ஏன்? என்பதற்கு விளக்கமளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், இது புதுமையான அரசாங்கம் இது. இந்த ஜனாதிபதி பதவிக்கு வந்து பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைத்தது எத்தனையாவது தடவையோ தெரியாது என்றார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) நடந்த ஊடக சந்திப்பிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பிரதான இரு காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முறை பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைக்கப்பட்டது. தற்போதைய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவருக்கு எதிராக பலரும் விரல் நீட்டுகின்றனர். அந்தப் பதவிக்கு அவர் பொருத்தமற்றவர் என கூறப்படுகின்றது.

கோப் குழுவின் உறுப்பினர் என்ற வகையில்,எரிவாயு நிறுவனம் 2022இல் 1.3 பில்லியன் பண விரயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த போது,எரிவாயு நிறுவனத்தை கோப் குழுவின் விசாரணைக்கு அழைக்குமாறு தவிசாளருக்கு இருமுறை கடிதம் எழுதினேன்.

தொடர்ச்சி P2

## கரட்டின் விலை 50 ரூபாவால் குறைந்தது

ஆ.ரமேஸ்.




நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய சந்தையில் மரக்கறிகளின் மொத்த விலையில் கரட் விலை 50 ரூபாய் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் ஞாயிற்றுக்கிழமை (28) காலை வெளியிட்டுள்ள மரக்கறிகள் கொள்வனவு மற்றும்,விற்பனை விலை பட்டியலில் இந்த விலை வீழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சிவப்பு கோவா 3,700 ரூபாய்,புரக்கோலின் 4,000 ரூபாய்,பெஸில் இலை 3,000 ரூபாய், ஐஸ்பேர்க் 2,600 ரூபாய் என மொத்த விற்பனை விலைகளில் மாற்றம் இல்லை.

தொடர்ச்சி P2



## காலி இலக்கிய விழாவில்...

காலி கோட்டையை அண்மித்த பகுதியில் சனிக்கிழமை (27) நடைபெற்ற "2024 காலி இலக்கிய விழா"வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கலந்துகொண்டு, புத்தகங்களை கொள்வனவு செய்தார். (ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## நவம் மீது தாக்குதல்

ஏ.எம்.கீத்

தமிழரசுக் கட்சியின் பொது நிர்வாக சபையின் உறுப்பினரும் ஊடகவியலாளரும் திருகோணமலை நவம் மீது மற்றுமோர் உறுப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

திருகோணமலை ஜேக்கப் ஹோட்டலில் சனிக்கிழமை (27) நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொது நிர்வாக சபை உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் மகாநாட்டிலேயே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

"தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்த தேர்தல் முறையின் அடிப்படையில் ஏனைய நிர்வாக உறுப்பினர்களையும் தெரிவு செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையைத் திருமலை நவம் முன்வைத்தார். இதன்போதே சக உறுப்பினர் ஒருவர் நவம் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

### சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும்

## "1,996 வீடுகளின் திட்டத்தை விரைவுபடுத்தவும்"



குறைந்த வருமானம் பெறுவோர், படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள 1,996 வீடுகளின் திட்டத்தை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

மார்ச் மாத தொடக்கத்தில் இங்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அவர் இங்கு வலியுறுத்தினார். அதற்கு முன்னதாக, சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர், இந்தத் திட்டத்தின் ஆரம்பப் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

தொடர்ச்சி P2

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக

## ஒட்டுமொத்த மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர்

6)பேரின்பராஜா சபேஷ், க.சரவணன்



இலங்கை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படுகின்ற சட்டங்கள் மக்களை அடக்கி ஒடுக்கும் சட்டங்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன என தெரிவி த்த பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தமிழர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக ஒட்டுமொத்த இலங்கை மக்களுமே பாதிக்கப்பட்டு இச்சட்டத்தின் வலியை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் கூறினார் கறுப்பு ஜனவரியை முன்னிட்டு

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு

2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றி ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை 2024 பெப்ரவரி மாதம் முதல் ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மு.காவின் மனு மீது இன்று விசாரணை



பாராளுமன்றத்தில் கடந்த ஜனவரி 10ஆம் திகதி கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய பயங்கரவாத தடைச் சட்டமூலத்திற்கு எதிராக 36 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்திருக்கும் மனு திங்கட்கிழமை(29) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய தலைமையில், ஐவர் அடங்கிய நீதியரசர் குழாமினால் இந்த வழக்கு விசாரணை விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை விட ஆபத்தான பல்வேறு விடயங்கள் அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்த புதிய திருத்தச் சட்டத்தில் அடங்கியுள்ளதாகப் பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

## ராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்த கடற்படை



ராமேஸ்வரம், கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படை விரட்டியடித்துள்ளது. மேலும், அவர்களின் 5 விசைப்படகுகளின் வலைகளை வெட்டி சேதம் செய்துள்ளது என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அதனால் ஒரு விசைப்படகுக்கு 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கூறியுள்ளனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோமாலிய கடற்கொள்ளையர்களால் மீன்பிடி படகொன்று கடத்தப்பட்டது

சோமாலிய கடற்கொள்ளையர்களால் இலங்கையின் நெடுநாள் மீன்பிடி படகொன்று கடத்தப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடலில் வைத்துக் குறித்த படகு மீனவர்களுடன் கடத்தப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிலாபம், திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 12ஆம் திகதி புறப்பட்ட நெடுநாள் மீன்பிடி படகில் இருந்த 06 மீனவர்களையும் சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்பரப்பில் இருந்து சுமார் 1160 கடல் மைல் தொலைவில் உள்ள கடல் பகுதியில் இந்த கடத்தல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட மீனவர்களை மீட்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைது செய்யாவிடின் 'யுக்திய' வினால் முடியாது



இலங்கை முழுவதும் தற்போது அமுல்படுத்தப்படும் 'யுக்திய' செயற்பாடு மிகச் சிறந்த வேலைத்திட்டம் எனவும், அதனை முறையான முறையில் மேலும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் ஆசிய மனித உரிமைகள் பேரவையின் தலைவரும், பூகோள அமைதிகாக்கும் பெடரல் சபையின் இலங்கைப் பிரதிநிதியுமான கலாநிதி திமுத்து பாலசூரிய தெரிவித்தார்.

இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட 60 மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கான சமூகமயமாக்கல் நிகழ்வு சீதுவ தினைடு கெடராஸ் நிகழ்வு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதிக்கு “முதுகெலும்பு இல்லை”

தவிசாளரை அழைக்கவில்லை. குறித்த இருகடிதங்களையும் சபையில் சமர்ப்பித்தேன் என்றார்.

ஊழல் மோசடிகளை மேற்கொண்ட அரச நிறுவனங்களை கோப் குழுவிற்கு அழைத்தபாடில்லை. ஊழலும் மோசடியும் நடந்த பிற்பாடு பிரயோசனம் இல்லை. நடக்க முன்னர் நடவடிக்கை எடுக்கும் இயலுமை கோப் குழுவிற்கு உண்டு. இதை கோப் தவிசாளர் செய்யவில்லை என்றார்.

இந்த அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை. மக்களிடமிருந்தும் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு உறுப்பினர்களிடமிருந்தும் தவிசாளருக்கு எதிராக எதிர்ப்புகள் கிளம்பியும் அரசாங்கத்தால் இவரைப் பதவி நீக்கச் செய்யவில்லை. பதவி நீக்க முதுகெலும்பு இல்லாததால் முது கொழும்பில்லாத அரசாங்கம். கூட்டத்தொடரை ஒத்தி வைத்துள்ளனர்.

கூட்டத்தொடரை ஒத்தி வைக்க இரண்டாம் காரணம் புண்ணியத்தில் கிடைத்த ஜனாதிபதி பதவியை, ஜனாதிபதி தனது நண்பர்களுடன் இணைந்து ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களைப் பதம் பார்க்கிறார்.

மறுபுறம் மக்களைச் சுரண்டி வரி விதித்து இரத்தத்தை உறிஞ்சி வருகின்றனர். எதிர்பார்ப்புகள் இன்றி மக்கள் தமது வாழ்க்கை கடந்து வருகின்றனர். இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்றார்.

உற்பத்திகள் குறைந்து விலைவாசி உச்சம் தொட்டுள்ளன. மக்களைத் தரைமட்டமாக்கியுள்ளனர். பல்வேறு மறைமுக வரிகளை அறவிட்டு வருகின்றனர். 10 இலட்சம் குடும்பங்களின் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பொருட்கள் விற்பனைக்குக் கடைகளில் இருந்தாலும் கொள்வனவு செய்ய முடியாத நிலையை மக்கள் எட்டியுள்ளனர். சவர்க்காரத்தை இரண்டு துண்டாக வெட்டி பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதியால் அடுத்தமுறை தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை அவர் நன்கறிந்து வைத்துள்ளார். இரண்டு முறை தோற்றார், வெல்ல முடியாது என இரண்டு முறைத் தாரை வார்த்தார், ஐந்தாவது தடவையாக ஜனாதிபதி பதவி புண்ணியத்தில் கிடைத்தது.

ஜனாதிபதி பதவியின் ருசியை நன்கு ருசிக்க வேண்டும் என்றபடியலும், இறுதி அக்கிராசன உரையினை நிகழ்த்துவதற்குமே கூட்டத்தொடரை ஒத்தி வைத்தார். 2048ஆம் ஆண்டு நாட்டை கட்டியெழுப்புவோம் என்று கதையைக் கட்டமைத்து தேசத்திற்குப் பொய்யாக உரையாற்றவே தயாராகி வருகிறார்.

இவருடைய இந்த கதைகளைப் பல தடவை நாம் கேட்டிருக்கிறோம். பதவி பறிபோக முன்னர் மீண்டும் ஒரு முறை அக்கிராசான உரையை நிகழ்த்தவே இந்த பிரயத்தனம் என்றும் மரிக்கார் எம்.பி குற்றஞ்சாட்டினார்.

# மானிய விலையில் தேயிலை உரம்

உரத்தின் விலை தற்போதைய சந்தை விலையில் இருந்து 50 சதவீதத்தால் குறைக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், T-750 மற்றும் T-709 உர மூட்டையின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவிற்கு ஆலோசனை வழங்கினார்.

T-750 மற்றும் T-709 உர மூட்டையின் 7,735 ரூபாவாகவும், T-200 உர மூட்டை ஒன்றின் விலை 5,500 ரூபா வரையும் குறைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரட்டின் விலை...

அதேநேரத்தில், நுவரெலியாவில் இருந்து வெளியிட சந்தைகளுக்கு அதிகமாகக் கொண்டு செல்லப்படும் மரக்கறிகளின் விலை பிரகாரம் கரட்டுக்கு மாத்திரம், 50 ரூபாய் விலை குறைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில்,
கோவா 520 ரூபாய்,
கரட் 1,350 ரூபாய்,
லீக்ஸ் 470 ரூபாய்,
ராபு 170 ரூபாய்,
இலை வெட்டா பீட் 420 ரூபாய், இலை வெட்டிய பீட் 520 ரூபாய்,
உருளைக்கிழங்கு 320 ரூபாய்,
சிவப்பு உருளைக்கிழங்கு 340 ரூபாய்,
நோக்கோல் 370 ரூபாய்
என மொத்த விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “1,996 வீடுகளின் திட்டத்தை விரைவுபடுத்தவும்”

நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படும் இந்த 1,996 வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் இந்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இதன்படி, பேலியகொடை துடுகெமுனு வீதியில் 615 வீடுகள், தெமட்டகொட எழுமடுவ தோட்டத்தில் 586 வீடுகள், மொரட்டுவ பெட்டரி தோட்டத்தில் 575 வீடுகள், மஹரகம அம்பவத்தையில் 112 வீடுகள் மற்றும் கொட்டாவ பழத்துருவத்தயில் 108 வீடுகளும் கட்டப்படவுள்ளன. கொட்டாவ பழத்துருவத்த வீடுகள் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்திற்கு சீன அரசாங்கம் 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்குகிறது. இது இலங்கை நாணயத்தில் சுமார் 24.48 பில்லியன் ரூபாயாகும்.

இந்த வீடமைப்புத் திட்டம் 08 இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், அதில் இரண்டு இடங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

ஏனைய இடங்களில் இருந்த வெவ்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த இடங்கள் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை. அதே நேரம் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திருக்கின்றதால் அந்த இடங்களையும் அமைச்சரவைக்கு முன்வைத்து அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்படுவதற்காகச் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 ஒப்பந்த நிறுவனங்கள் கிடைப்பதற்கு இருக்கின்றது. அந்த 5 நிறுவனங்களையும் பெற்றுக் கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# பிரமிட்டில் ரூ.500 கோடி மோசடி செய்தவர் கைது

‘டிரேட்வின்’ எனும் பெயரில் பிரமிட் முறைமையின் ஊடாக வர்த்தக நடவடிக்கையை முன்னெடுத்து, அதில் பணத்தை வைப்பிலிடும் வைப்பாளர்களின் பணத்தில் 500 கோடி ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் வலையமைப்பு விசாரணைப் பிரிவினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாகத் தலைமறைவாக வாழ்ந்து வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பிலிமத்தலாவை பிரதேசத்தில் மறைந்திருந்த போதே இவர் கைது செய்யப்பட்டார் என்று அந்த வலையமைப்பின் விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

சந்தேகநபர் பட்டத்தாரி ஆசிரியராக இருந்துள்ளார். அத்துடன் தென் மாகாணத்தில் உள்ள பிரதான விஹாரை ஒன்றில் பஸ்நாயக்க நிலமேயாகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தரிந்து ஈரோஸ் வீரசேகர கஹடகஸ்திகிலிய நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (28) ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கஹடகஸ்திகிலிய பதில் நீதவான் திமுத்து உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக

# ஒட்டுமொத்த மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர்

ஊடக அடக்குமுறைக்கு எதிராக நீதி வேண்டி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சனிக்கிழமை (27) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 1979இல் தமிழர்களுக்கு எதிராக 6 மாதத்திற்குத் தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத சட்டம், இன்று வரை தொடர்ச்சியாக இருக்கின்றது. இந்த நிலையில், ஊடகங்களையும் மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் அடக்குவதற்காக இந்த நிகழ்நிலை காப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்த சட்டத்திற்கு வடக்கு, கிழக்கு சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கையை உயர்த்தி ஆதரவு கொடுத்திருக்கின்றார்கள். இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றத்தில் கையை உயர்த்திய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்கள் கூட இச்சட்டத்தினால் பாதிக்கப்படலாம்.

தமிழ் மக்களுக்காகத் தான் இச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றதோ என்ற சந்தேகங்கள் எழுகின்றது. ஏனென்றால், கூடுதலான ஆர்ப்பாட்டங்கள், நில அபகரிப்புகள், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆர்ப்பாட்டங்கள், எல்லாம் வடக்க கிழக்கில் கூடுதலாக நடக்கின்றன. வடக்கு, கிழக்கில் மக்கள் கிளர்ந்து எழக்கூடாது என்பதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது. அதற்கு மேலாக, இந்நாட்டின் அரகலய போராட்டம் என்ற போராட்டங்கள் கூட இனி ஏற்படக் கூடாது எனவும் அரசுக்கு எதிராக மக்கள் கருத்து கூறக்கூடாது என்று அரசு நினைக்கின்றது. இன்று இருக்கும் அரசு, நாளை மாறலாம் நாளை மாறும்போது, தனக்கு சாதகமாக தற்போது இருக்கும் அரசு அங்கத்துவம் பெறுபவர்கள் கூட இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படலாம் என்பதை மறந்து விடக்கூடாது என்றார்.

அத்துடன், கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும் கொல்லப்பட்டும் ஊடக கலையகங்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு வரலாறுகள் இருக்கின்றன. 40க்கும் மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். யாருக்குமே இன்று வரை நீதி கிடைக்கவில்லை. நீதி கிடைக்கும் என்று கூட எதிர்பார்க்க முடியாது. ஊடகங்களை ஒழுங்கு படுத்தக்கூடிய ஒரு தேவையும் இருக்கின்றது. தற்போது ஊடகங்களுக்கு அப்பால் சமூக வலைத்தளங்களுக்கு ஊடாக சில பாதிப்புகளும் மக்களுக்கு நடக்கின்றது. குறிப்பாகச் சிலர் தற்கொலை செய்வதற்கும் இந்த முகநூல் மூலமாக சில பிரசாரங்கள் செய்யப்படுவதனால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இருந்தபோதும் அதை விடுத்து ஊடகங்களை அடக்கி தனக்கு எதிரான கருத்துக்களை யாருமே கூறக்கூடாது என்ற ஒரு நிலையில், தான் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் வருகின்றது என்பதை நாங்கள் எல்லோரும் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கின்றோம். இதனை அரசாங்கம் மீளப்பெற வேண்டும் என்றார்.

மேலும், நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு எதிராக 56 அமைப்புகள் குரல் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, சர்வதேசத்தின் கவனம் இலங்கை அரசு மீது திரும்பி இருக்கின்றது. ஏற்கெனவே பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று சர்வதேசம் கூறுகின்றது பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு சிந்திக்கின்றது. எங்களை பொருத்தமட்டிலே, பயங்கரவாத தடுப்புச் சட்டமும் வேண்டாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம் ஊடகங்களை அடக்கும் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் வேண்டாம் என்பதை எங்களுடைய உறுதியான நிலைப்பாடு என்றும் கூறினார்.

# நவம் மீது தாக்குதல்

தாக்குதலில் கீழே விழுந்த நவத்தை ஏனைய உறுப்பினர் உனடியாக தூக்கி விட்டனர். தாக்குதல் நடத்தியவர் மற்றுமோர் உறுப்பினர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில்...

மாணவர்களின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில், ஜனாதிபதி ரணில் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட, ஆனால்

பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபாய் மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6,000 தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புதுப்பிக்கப்படும் தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்வதற்கு , ஜனாதிபதி நிதியத்தின் w facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube செனலான youtube.com/@PresidentsFund ஐ like/follow அல்லது subscribe செய்யுமாறும் presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

# கைது செய்யாவிடின் ‘யுக்திய’ வினால் முடியாது

இரவு நேரத்தில் பொலிஸ் அதிகாரிகளுடன் புகைப்பட பிடிப்பாளர்களையும் அழைத்துச் சென்று கைது செய்வதால் அந்த இடங்களில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் பெரும் சிரமத்திற்கு ஆளாவதாகவும், போதைப்பொருள் பாவனையாளர்களை மட்டுமின்றி அவற்றை இலங்கைக்குள் இறக்குமதி செய்வோரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இல்லையேல் இன்னும் பல வருடங்களுக்கு ‘யுக்திய’ நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இலங்கையில் போதைப்பொருளை ஒழிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரபிக்கடலில் கடந்த சில நாட்களாகக் கடத்தப்பட்ட இலங்கை மீனவர்களைக் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என நம்புவதாக கலாநிதி திமுத்து பாலசூரிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் சட்ட அமலாக்கத்தில் பயிற்சி பெற்ற சமூக ஆர்வலர்களுக்குச் சான்றிதழ்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

# மாயையை கிழித்திருக்கிறது சர்வதேச நீதிமன்றம்

எஸ். தில்லைநாதன்

தமிழ் அரசியல் தரப்புக்களினால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் அர்த்தமற்றவை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அர்த்தமற்ற மாயைகளைத் தொடர்ந்தும் மக்கள் நம்பிக் கொண்டிருக்காமல் தீர்வுகளை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

காசா மீது இஸ்ரேல் முன்னெடுத்து வருகின்ற தாக்குதல் தொடர்பாக தென்னாபிரிக்காவினால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்குத் தீர்ப்பு தொடர்பாகக் கருத்து தெரிவித்தபோதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 14 வருடங்களுக்கு மேலாக சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் என்ற கோஷங்களை சில தமிழ் தரப்புக்கள் மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றன.

குறிப்பாக இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற உயிரிழப்புக்களுக்கான நீதி மற்றும் காணாமல் போனோருக்கான பரிகாரம் போன்றவற்றைச் சர்வதேச நீதிமன்றத்தின் மூலமே பெற்றக்கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை கொள்ள முடியாது எனவும் சொல்லுகின்ற தமிழ் அரசியல் தரப்புக்கள், தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மாயையை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

தற்போது, இஸ்ரேல் விவகாரத்தில் தென்னாபிரிக்காவினால் சர்வதேச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கிற்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது, சர்வதேச நீதிமன்றின் சிந்தனை மற்றும் பார்வை எத்தகையது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான மக்களைத் தினமும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்குதல்களை நிறுத்துமாறு உலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிடவில்லை. இனப்படுகொலை மற்றும் யுத்த குற்றம் தொடர்பான சர்வதேச நியமங்களை மதித்து நடக்குமாறு சொல்லியிருக்கிறது.

காசாவில் குறுகிய பிரதேசத்தில் பல லட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வதேச நீதிமன்றிற்குத் தெரியாத சமாச்சாரங்கள் இல்லை. அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத்துமாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

இவ்வாறான சம்பங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புக்களின் மனோநிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்’ என்று தெரிவித்துள்ளார்.

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்



எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும். பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி ஏ.யூ.அப்துல் ஸமட் அறிவித்துள்ளார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் மக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறும் குறிப்பாக விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந்நோய் அதிகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

எலிக்காய்ச்சலினால் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருவதோடு, கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் இது தொடர்பில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் காய்ச்சல்,தசைகளில் கடுமையான வலி,கண் விழி சிவப்பு நிறம் அடைதல், சிறுநீர் வெளியேற்றம் குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் இந்நோயின் அறிகுறிகளாகும் எனவும் தெரிவித்துள்ளார்.





## விபத்தில் இளைஞன் பலி

எச்.எம்.எம்.பர்ஸான்

டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவமொன்று சனிக்கிழமை (27) இடம்பெற்றுள்ளது.

தம்பாளை-வேப்பம் புரயை சேர்நத 17 வயதுடைய அன்வர் அப்ரான் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் தம்பாளை - றிபாய் புர உள்ளக காபர்ட் வீதியால் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே, இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தை ஏற்படுத்திய டிப்பர் சாரதியை கைது செய்யப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புலஸ்த்திபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கோர விபத்தில் 8 பேர் படுகாயம்

அ.அச்சுதன்



திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள தங்கநகர் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 08 பேர் படுகாயமடைந்த நிலையில், மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் வெள்ளிக்கிழமை (26) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையில் இருந்து திருகோணமலைக்கு வேனில் சுற்றுலா சென்றவர்கள் சுற்றுலாவை முடித்து திரும்பிச் செல்லும்போது, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் ரக லொறியின் பின்னால் மோதுண்டதில் இவ்விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்போது வேனில் பயணித்த அவிசாவளையைச் சேர்ந்த வேன் சாரதி உட்பட 07 பேர் படுகாயமடைந் துள்ளதுடன், முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் ரக லொறியின் உதவியாளர் ஒருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகியதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன்,

இந்த விபத்து சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாவியிலிருந்து சடலம் மீட்பு

செ.திவாகரன்,டி.சந்ரு

நுவரெலியா-கிரகரி வாவியிலிருந்து ஆணொருவரின் சடலமொன்று சனிக்கிழமை (27) மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் உள்ள கிரிகரி வாவிக்குச் செல்லும் பாலத்திலிருந்து வெள்ளிக்கிழமை (26) மாலை 6:45 மணியளவில் நபர் ஒருவர் வாவியில் விழுவதை வாவிக்கரையில் நடந்து சென்ற இரு யுவதிகள் அவதானித்து, உடனடியாக நுவரெலியா பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்போரில் சம்பவ இடத்திற்குச் விரைந்த பொலிஸார், நுவரெலியா பொலிஸாரின் உயிர் பாதுகாப்பு பிரிவின் உதவியுடன் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் சுமார் 18 மணித்தியாலங்களின் பின்னர் சனிக்கிழமை (27) காலை குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலப்பிட்டி - கெட்டபுலாவ ஹரங்கல பிரதேசத்தை சேர்ந்த 64 வயது ராமன் பத்மநாதன் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவரின் பணப்பையில் இருந்த தேசிய அடையாள அட்டையில் இருந்து அடையாளம் மற்றும் முகவரி போன்ற தகவல்களை கிடைத்ததாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் நுவரெலியா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.











## திருகோணமலையில் உழவர் திருநாள்

அ . அச்சுதன்

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும், திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் இணைந்து நடாத்திய "உழவர் திருநாள்" உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் இலங்கை கிளையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் திருகோணமலை நகராட்சி மன்றக் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (27) நடைபெற்றது.

ஆன்மீக அருள் உரையினை வேதாகம மாமணி. பிரம்ம ஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்கள் வழங்கி வைத்துள்ளதுடன், முதன்மை விருந்தினராக, உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் சர்வதேச தலைவர் த.மகிபாதேவனும் சிறப்பு விருந்தினராகத் திருகோணமலை நகராட்சி மன்றச் செயலாளர் வெ.இராஜசேகரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

## கைதியிடமிருந்து ஐஸ் மீட்பு

ஷேன் செனவிரத்ன

போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில், பல்லேகல-தும்பர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரிடமிருந்து 04 கிராம் 900 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய கைதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேகல-தும்பர சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, குறித்த கைதியிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அவருக்கு போதைப்பொருள் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் பல்லேகல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சங்கு பிடித்த மூவர் கைது

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - கற்பிட்டி, இப்பந்தீவு பகுதியில் சங்குகளைச் சட்டவிரோதமான முறையில் பிடித்த மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் விஜய கடற்படையினரால் கற்பிட்டி இப்பந்தீவு கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின்போது, சந்தேகத்திற்கிடமான படகொன்று கற்பிட்டி, இப்பந்தீவு கடற்பகுதியில் இருந்துள்ளது.

அதனைச் சோதனையிட்டபோது, சட்டவிரோதமான முறையில் சங்குகளைப் பிடித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களிடமிருந்து 1,856 சங்குகள் மற்றும் டிங்கி இயந்திர படகொன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட மூவருடன் கைப்பற்றப்பட்ட சங்குகள் மற்றும் டிங்கி படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## செட்டியார் வீதியின் பணிகள் ஆரம்பம்



எம்.எஸ்.எம். நூர்தீன்

ஏறாவூர்ப்பற்று-செங்கலடி, வந்தாறுமூலை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 2.3 கிலோ மீற்றர் தூரமான செட்டியார் வீதியானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ.சந்திரகாந்தனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 75 மில்லியன் ரூபாய் காப்பெட் வீதியாக செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வேலைத் திட்டத்தினை முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

## புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம்



எம்.எம்.றம்ஸீன்

அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில் "யுக்திய" போதைப்பொருள் அற்ற தேசம் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சி திட்டத்தின் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பொலிஸ் உயர் அதிகாரிகள், அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு, சவளக்கடை, மத்திய முகாம், பாணம, பொத்துவில் போன்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாடு சபையின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் முகம்மட் றஷாட், அம்பாறை மாவட்ட செயலகத்தின் உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் முகம்மட், சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கு பொறுப்பாளர் ஏ.அப்துல் சலாம் உட்பட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# மலையகத்தில் இருந்து ஜனாதிபதி பொது வேட்பாளர் தேவையா?

இவ்வாண்டு (2024) தேர்தல் ஆண்டாக இருப்பதால், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய தொகுதிகளுக்குப் படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். இன்னும் சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே தங்களுடைய பயணத்தை ஆரம்பித்துவிட்டனர். ஒரு சில கருத்துக் கணிப்பின் பிரகாரம், பிரதான கட்சிகளின் தேர்தல் வெற்றி சற்று தூரமாகவே இருக்கின்றது.

பாராளுமன்றத்தின் ஒன்பதாவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 7ஆம் திகதியன்று ஜனாதிபதியின் அக்கிராசன உரையுடன் புதியக் கூட்டத்தொடர் ஆரம்பித்துவைக்கப்படும். செயலிழந்து இருக்கும் குழுக்களுக்கு அதன்பின்னர் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இது சம்பிரதாயமாகும்.

எனினும், தற்போதைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைவருக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தலைவரை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு திராணியற்றிருக்கும் அரசாங்கம், கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளது என எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலா? அல்லது பொதுத் தேர்தலா? முதல் நடக்கும் என்பதில் ஒரு தெளிவற்ற நிலைமையே காணப்படுகின்றது. எனினும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்களை அரசியல் கட்சிகள் அறிவித்துவிட்டன. இன்னும் சில கட்சிகள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

இதேவேளை, வடக்கு கிழக்கை மையமாகக் கொண்டு தமிழ் வேட்பாளரை பொது வேட்பாளராக நியமிக்கவேண்டுமெனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அக்கோரிக்கைக்குச் சார்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. விமர்சனங்களுக்கும் குறைவில்லை. எனினும், தமிழர்களின் வாக்குகளே அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை.

இது ஒருபுறமிருக்க, அடுத்த ஜனாதிபதி தேர்தலில், மலையக மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டுமென முன்னாள் பிரதியமைச்சர் புத்திரசிகாமணி கூறியிருக்கின்றார். யாருக்கும், எவ்வாறான கருத்துகளையும் கூறும் உரிமையுண்டு. அதனை மறுக்கவில்லை. எனினும், யதார்த்தமாக இருக்கவேண்டும் என்பதே எங்களுடைய அவதானிப்பாகும்.

மலையகத்தை அடையாளமாகக் கொண்ட கட்சிகள், தொழிற்சங்களுக்கு இடையில் ஓர் ஒற்றுமை இல்லை என்பது, கடந்தகால நாடகங்களின் போது அம்பலமானது. ஆகக் குறைந்தது 'மலையகம்-200' நிகழ்வினையாவது ஒரு குடையின் கீழிருந்து செய்திருந்தால், ஒரு திருப்தியாக இருந்திருக்கும் அந்த நிகழ்வையும் தங்களுடைய இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கான தனித்தனியாகச் செய்தனர்.

பொதுவான விடயங்கள் கட்சி, அரசியல், தொழிற்சங்க பேதங்களை விட்டுவிட்டு ஓரணியில் திரண்டிருக்கலாம். எனினும், அந்த சிந்தனை மலையக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்களிடம் இல்லை என்பது கடந்தகால நிகழ்வின் போது அம்பலமானது. இந்நிலையில், மலையக மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதை போலவே இருக்கும்.

இந்த பழமொழிக்குப் பல அர்த்தங்கள் இருந்தாலும், மலையக அரசியலில் ஓர் ஒற்றுமை இல்லாத நிலையில், மலையகத்தில் இருந்து பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமில்லாத ஒரு செயலாகும் என்பதே எங்களுடைய அவதானிப்பாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசியத்துக்கான ஒற்றுமை

**லக்ஸ்மன்**

தமிழ்த் தேசியம் பலப்படுதலொன்றே காலத்தின் தேவை என்பதனை உணர்ந்துகொள்ள தலைப்படுதலை முக்கியப்படுத்தல் நடைபெறுவதாகயில்லை. தனிப்பட்ட கோப தாபங்களையும், வெப்புசாரங்களையும் காண்பிப்பதற்கான தருணம் இதுவல்லவென்பதை யாரும் உணரவுமில்லை. தமிழர்களின் தேசியம் என்பது உணர்வு ரீதியானதே! இந்த உணர்வினை சரியாகக் கைக்கொள்ளவும் கையாளவும் தெரியாதவர்களாகவும், அதனைப்பற்றிப் புரிந்து கொள்ள முயலாதவர்களாகவும் தமிழர்கள் இருக்கிறார்களா என்ற கேள்வியை இந்த இடத்தில் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த யதார்த்தத்தினை உணராது நடந்து கொள்வதுதான் தற்போது தமிழ்த் தேசியம் பற்றிப் பேச முனைபவர்களின் நிலை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டார். அந்தத் தெரிவானது அக்கட்சிக்குரியதே. ஆனாலும், தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமை இதிலிருந்து தொடங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ்த் தேசியம் சார்ந்து சிந்திப்பவர்களிடம் பொதுவாக இருக்கிறது. இருந்தாலும் அது நடைபெறுமா என்பதுதான் புரியாத புதிர். இதற்கிடையில் பொதுச்செயலாளர் தெரிவு அமளிதுமளியில் முடிந்திருக்கிறது என்பதுடன் முற்றுப்பெறவுமில்லை. அந்த வகையில் இந்த எதிர்பார்ப்பைச் சீர்குலைக்கும் வகையில் இத்தெரிவு நிகழ்ந்து விடக்கூடாது.

தமிழ் மக்களது அரசியலுரிமைக்கான அரசியலை யார் முன்கொண்டு செல்லவேண்டும் என்பதனை ஒவ்வொரு கட்சியிலுமிருக்கின்ற ஒரு சிலரே தீர்மானிக்கின்ற நிலைமைக்கப்பால், இம்முறை பொது வாக்கெடுப்பின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் தலைமை தெரிவு நடைபெற்றிருக்கின்றமையானது பாராட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும், சுயநலன்களுக்கப்பால் மக்களுக்கான அரசியல் முதன்மைப்படுத்தப்படவேண்டும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த இடத்தில்தான் தமிழ்த் தேசியத்துக்கான ஒற்றுமை என்கிற விடயம் முதன்மை பெறுகிறது. அண்மைய காலங்களாகத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை பற்றிய பேச்சுக்கள் எழுந்தாலும் அதனை மேவும் வகையில் போராட்ட ஆயுத இயக்கங்களாக இருந்து அரசியல் நீரோட்டத்துக்குள் இணைந்தவர்களையும் விமர்சிக்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. இது காலத்தின் தேவையற்றது என்பதும், இது மேலும் தமிழ்த் தேசிய அரசியலில் முரண்பாட்டை ஏற்படுத்தும் என்பதும் மறக்கப்பட்டதனால் நடைபெறுவதாகவே உணர முடிகிறது. அதேநேரத்தில், அரசியல் தெளிவின்மை காரணமாகவும் இருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகவே போராடத் தொடங்கியிருந்தனர். சகோதர இயக்க எதிர்ப்பு, படுகொலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பலனாக உருவான பல விரோதச் செயல்கள் பலராலும் மறக்கப்பட முடியாதவை என்பதனை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கடந்தகால செயற்பாடுகளை, தவறுகளை மறப்போம் மன்னிப்போம் என்ற நிலைக்கு வந்ததன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அது காலம் கடந்த முடிவு என்றாலும், அது நிகழ்ந்தது ஒரு மன நிலை மாற்றமே. இதனை அறியாதவர்கள் இன்றைய காலங்களில் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவது வியப்பானது.

> **தமிழர்களின் அரசியலைப் பல கட்சிகளாகத் தனித்து நின்று மேற்கொள்ள முடியாது என்பதனைப் புரிந்து கொண்டமையினால் உருவான கூட்டமைப்பு சிதைந்து கொண்டிருக்கிறது...**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழர்களுக்கான அரசியல் செயற்பாட்டுக்கானதாக ஆக்கி ஆரம்பத்தில் உதய சூரியனையே தேர்ந்தெடுத்திருந்தார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்திருந்தன.

உதய சூரியன் சின்னத்தில் ஏற்பட்ட பிரச்சினையால், 1976களிலேயே கிடப்பில் போடப்பட்டிருந்த வீட்டுச் சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.

அச்சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் அதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இது பெரும் முரண்பாடாக தொடர்ந்துகொண்டே இருந்தது.

> **ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் எட்டிவிட்டது. இருந்தாலும் இதுவரை இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைக்கவில்லை. இது ஒரு காலம் கடத்தும் செயற்பாடாகவே சென்று கொண்டிருக்கிறது...**

இறுதியில் கடந்த வருடம் அக்கட்சி தனிவழி சென்றது. ஆனாலும், அவர்கள் இணைய வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வராமலில்லை.

விடுதலைப் புலிகள் தங்களது கடந்தகால தவறுகளை மறந்து ஏனைய போராட்ட இயக்கங்களையும் இணைத்தே தமிழர்களின் தேசிய அரசியல் நடைபெறவேண்டும் என்ற நிலைக்கு வருவதற்கிடையில் பல பெரும் இழப்புக்களைத் தமிழர்கள் சந்தித்திருந்தார்கள். தேர்தல்கள் வரவிருக்கின்ற வேளையிலும் அதேபோன்ற பல இழப்புகளைச் சந்தித்த பின்னர்தான் தமிழரசுக் கட்சி தன்நிலை உணரும் என்றால் அது ஒரு ஆபத்தான முடிவாகவே இருக்கும் என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

யுத்தம் உக்கிரமடைந்து ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதனையடுத்து, ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தினை தமிழரசுக் கட்சி சாதகமாக்கிக் கொண்டு தன்னுடைய ஏகாதிபத்திய ஆதிக்கத்தினை நடைமுறைப்படுத்தியதனால் உருவாகியிருக்கின்ற இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி வெளியேறியது. அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறியது. அவ்வாறு பார்த்தால் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த ஒற்றுமை தமிழரசுக் கட்சியின் ஏகாதிபத்திய நடைமுறை காரணமாகக் குலைந்து போனது என்றே கொள்ளலாம். பின்னர் 2023இல் தமிழரசுக் கட்சி தனி வழி தேடிச் சென்றது.

தமிழர்களின் அரசியல் சின்னமாக வீடும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் அரசியல் கட்சியாகவும் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும் தமிழரசுக் கட்சியின் ஏகாதிபத்திய, மேட்டுக்குடி நிலைப்பாடு காரணமாகக் கட்சிகள் பல வெளியேறும் நிலை ஏற்பட்டிருந்தது. தமிழர்களின் அரசியலைப் பல கட்சிகளாகத் தனித்து நின்று மேற்கொள்ள முடியாது என்பதனைப் புரிந்து கொண்டமையினால் உருவான கூட்டமைப்பு சிதைந்து கொண்டிருக்கிறது.

இது தமிழ்த் தேசிய நலனைக் கருத்தில் கொள்ளாத அரசியலாலேயே நிகழ்கிறது என்பதே உண்மை.

தமிழ்த் தேசிய நலனும், அதன் நிலைப்பாடும் மாற்றமுறா வகையில், அரசியல் பயணம் தேவையாக இருக்கிறது இதனை மறந்து தங்களுடைய வெப்புசார, கோபதாப மனோநிலைகளைக் காண்பித்து வருபவர்கள் சற்றே அமைதி கொள்வதே தமிழ்த் தேசியத்துக்காற்றும் பணியாக அமையும். இல்லையேல் தேவையற்ற விளைவுகளைத் தமிழர்கள் எதிர்கொள்ளவும் அனுபவிக்கவும் நேரலாம்.


இந்த இடத்தில்தான் தமிழ்த் தேசிய அரசியலுக்கான ஒற்றுமை குறித்து விடயம் கவனத்திற்கு வருகிறது. தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி என மிதவாத அரசியலுடனும், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்எல்எவ், ஈ.என்.டி.எல்.எவ்., ஈரோஸ் என ஆயுத அரசியலுடனும் தொடர்ந்த தமிழர்களுடைய விடுதலைக்கான முயற்சிகள் பலனற்றுப் போனதற்கு தமிழர்களிடமில்லாததான ஒற்றுமையே காரணம். அதனைக் கட்டியெழுப்புவது முக்கியமானதாகும். தமிழரசுக் கட்சியின் விலகலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சின்னமற்றதானது.

இந்த நிலையில், ஏற்கெனவே பதிவிலிருந்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அறிவிக்கப்பட்டது. இதில், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன தற்போதுள்ளன. ஈழத் தமிழர்களின் வரலாற்றில் சின்னங்கள் மாறுவதும், கூட்டணிகள் அமைக்கப்படுவதும் குலைவதும், பிரிவதும் சேர்வதும் சர்வ சாதாரணமானது என்ற வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உருவாகியிருப்பதாகவே கொள்ளமுடியும்.

ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் எட்டிவிட்டது. இருந்தாலும் இதுவரை இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைக்கவில்லை. இது ஒரு காலம் கடத்தும் செயற்பாடாகவே சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில், மேலும் மேலும் பிளவுகள் தேவையற்றதே.

அத்தோடு, உருவாகிவரும் தமிழ்த் தேசிய அரசியலைத் தமிழ் மக்கள் வெறுக்கும், வேறு அரசியல்களுக்குள் சாய்கின்ற நிலை ஆபத்தானது என்பதனையும் தமிழர்களின் அரசியல் தரப்பினர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியம் பலப்படுத்தப்படுத்தல் ஒன்றே காலத்தின் தேவை என்ற அடிப்படையில் இனியேனும் தமிழ்த் தேசிய அரசியலானது தமிழ்த் தேசியத்துக்கானது என்ற உணர்வு ஏற்பட்டு ஒற்றுமை உருவாகட்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட.



## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மை மிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழிச் செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை; அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வெள்ளம் வழிந்தோட முடியவில்லை

முல்லைத்தீவு - உப்புமாவெளி கிராமத்தில் கடலுக்குள் நீர் வழிந்தோட முடியாமல் மக்கள் குடியிருப்புக்குள் தேங்கி நிற்பதனால் 30 மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

உப்புமாவெளி-பாரதிபுரம் சுடலைக்குச் செல்லும் வீதியில் மழை வெள்ளம் கடலுக்குச் செல்ல முடியாமல் தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக இறந்தவர்களின் உடல்களைக் கூட நீரினை கடந்தே சுடலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் கடற்கரைக்கு அண்மையாகப் பெருமளவில் மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வு காரணமாகவே இப்பகுதியில் மழை வெள்ளம் வழிந்தோட முடியாமல் நிற்பதாகத் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் இது தொடர்பாக கரைதுரைபற்று பிரதேச செயலகம், கரைதுறைபற்று பிரதேச சபை என்பவற்றிற்குத் தகவல்கள் வழங்கியும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு போன்ற நோய்கள் உருவாகக் கூடிய அபாயம் இப்பகுதியில் காணப்படுவதாகவும் இதற்கான தீர்வாகக் குறித்த வெள்ளத்தினை அகற்ற வேண்டும் அல்லது வீதியினை உயர்த்துவதன் மூலம் இவ்வெள்ளத்தினை இப்பகுதியிலிருந்து அகற்ற முடியும். இதற்கான நடவடிக்கையினை கரைதுறைபற்று பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் உப்புமாவெளி கிராமத்தில் கடற்கரையினை அண்மித்த பகுதியில் பெருமளவில் மணல் அகழ்வு நடைபெற்றபோது, ஒன்று திரண்ட பொது அமைப்புகள் எடுத்த முயற்சி காரணமாக மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ள போதிலும், மணல் அகழ்வு இடம் பெற்ற பகுதிகளில் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாக இப்பகுதி மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

– நடராசா கிருஸ்ணகுமார்

# போலி சிகரெட்டுக்கள் தொடர்பில் சூத்திரதாரியாக செயல்படுபவர் யார்?

உலக சுகாதார அமைப்பு (WHO) வரையறுத்துள்ளபடி, 'சட்டவிரோத சிகரெட் வர்த்தகம்' என்பது சிகரெட்டுகளின் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, உடைமை, விநியோகம், விற்பனை, கொள்முதல் மற்றும் எளிதாக்குதல் போன்ற சட்டவிரோத முயற்சிகளை குறிக்கிறது. சட்டவிரோத வர்த்தகம் மூன்று தயாரிப்பு வகைகளைக் கொண்டுள்ளது.

கடத்தல் (smuggled போலித் தயாரிப்புகள் counterfeits மற்றும் மலிவான/சட்டவிரோத சிகரட்டுக்கள் (வெள்ளை சிகரட்டுகள் cheap/ elicits போன்றவையாகும். hite புதிய ஆதாரங்களுடன், புகையிலை நிறுவனங்கள் சிகரெட் கடத்தலில் சிக்கலாக ஈடுபட்டுள்ளன என்பதும், இது உலக அளவில் புகையிலை நிறுவனங்களால் பின்பற்றப்படும் ஒரு விரிவான உத்தி (தந்திரோபாயம்) என்பதும் இனியும் ஒரு ரகசியம் அல்ல.

உலக சுகாதார அமைப்பு மற்றும் பாத் பல்கலைக்கழகத்தின் அறிக்கைகளின்படி, புகையிலை நிறுவனங்களின் உள் ஆவணங்கள் 1990களின் முற்பகுதியில், சிகரெட் கடத்தல் தொழில்துறையின் வணிக உத்தியின் மிக முக்கியமான பகுதியாக இருந்தது.

1990களின் பிற்பகுதியிலும் 2000 ஆண்டுகளின் முற்பகுதியிலும் இந்த தந்திரோபாயங்கள் அம்பலமானது. குறிப்பாக விசாரணைகள், புகைபொருள் உற்பத்திக்கு எதிரான வழக்குகள் போன்றன புகையிலை நிறுவனங்களுக்கு மிகவும் எதிர்மறையான விளம்பரத்திற்கு வழிவகுத்தது.

பாரிய மக்கள் தொடர்பு பிரசாரத்தைப் பயன்படுத்தி, புகையிலை நிறுவனங்கள் தாங்கள் சிகரெட் கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியது. ஆனால், தற்போதைய சான்றுகள், சட்டவிரோத சிகரெட் வர்த்தகத்தில் புகையிலை நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க, தொடர்ச்சியான குறுக்கீடுகள் ஏற்கெனவே நடந்து வருகின்றன என்பதைக் காட்டுகிறது.

பல தசாப்தங்களாக, பன்னாட்டுப் புகையிலை நிறுவனங்கள் தங்கள் சொந்த தயாரிப்புகளைக் கடத்துகின்றன, அதன் மூலம் அவர்களின் நிதி தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. புகையிலை நிறுவனங்கள் பின்வரும் நன்மைகளைப் பெற தங்கள் தயாரிப்புகளைக் கடத்துகின்றனர்

* சிகரெட் பொருட்கள் மீதான வரி அல்லது விலை உயர்வைக் கட்டுப்படுத்துதல்.

* அவர்களின் தயாரிப்புகள் சட்டப்பூர்வமானதா அல்லது சட்டவிரோதமானதா என்பதைப் பொருட்படுத்தாமல் அதன் மூலம் இலாபம் ஈட்டுதல்.

* புகையிலை கட்டுப்பாட்டுக் கொள்கைகளுக்கு எதிராக வாதிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்தல். குறிப்பாக சிகரட் மீது ஏற்படுத்தும் ஒவ்வொரு கொள்கையும் சிகரெட் கடத்தலை அதிகரிக்க வழிவகுக்கிறது.

> **சிகரெட் மீதான வரி அதிகரிப்பால், நுகர்வோர் மீண்டும் மலிவு விலையில் மாற்று வழிகளுக்குத் திரும்புவார்கள். இது சட்டவிரோத சிகரெட் வர்த்தகம் அதிகரிப்பதற்கு வழிவகுப்பதுடன், அரசுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படும்...**

* கடத்தலின் விளைவாகக் குறையும் சாதாரண பொதுச் சந்தை விலைகள் புகையிலை தொழிலை நிறுத்துவதைத் தடுக்கின்றது மற்றும் மொத்த விற்பனையை அதிகரிக்கிறது.

* சட்டவிரோத விற்பனையானது தற்போதுள்ள புகையிலை கட்டுப்பாட்டுக் கொள்கைகளை (பேக்கேஜிங் சட்டங்கள், விற்பனையின் வயது வரம்புகள்) பலவீனப்படுத்துகிறது.

* புகையிலை நிறுவனங்கள் சந்தையில் நுழைவதற்கும் ஓர் உத்தியாகவும் கடத்தலைப் பயன்படுத்துகின்றன.

சிகரெட் மீதான வரி அதிகரிப்பதற்கான முன்மொழிவு முன்வைக்கப்படும் போது அல்லது இலங்கையில் தற்போது நடைமுறையில் இருப்பது போல், சிறந்த வரிக் கொள்கைகள் இருக்கும் போது நாட்டில் சட்ட விரோதமான சிகரெட் வர்த்தகத்தின் அளவையும் தீவிரத்தையும் பெரிதுபடுத்துவது புகையிலை நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் பொதுவான உத்தியாகும்.இச்சந்தர்ப்பத்தில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சில முக்கிய பொதுவான வாதங்கள் பின்வருமாறு,

- சிகரெட் வரி அதிகரிப்பு காரணமாகச் சட்டவிரோத புகையிலை பொருட்களின் வர்த்தகத்தை அதிகரிக்கும்.

- ஒரு சட்டவிரோத சிகரெட் சந்தையின் இருப்பு வரி அதிகரிப்புக்குப் பிறகு அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுக்கிறது.

ஜூலை 2023இல் சிகரெட் பொருட்களுக்கான வரி 20 சதவீதம் மற்றும் 01 ஜனவரி 2024இல் 14 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதன் மூலம், மேற்கண்ட வாதங்கள் ஊடகங்களில் அதிக அளவில் விளம்பரப்படுத்தப்பட்டன, இது சட்டவிரோத புகையிலை வர்த்தகம் பற்றிய உச்சக்கட்ட பேச்சுக்கு வழிவகுத்தது.

இது சம்பந்தமாக, இலங்கையில் சில ஆய்வு அறிக்கைகளின் உள்ளடக்கங்களைக் கவனம் செலுத்தும் போது, ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் சிகரெட் வரி அதிகரிப்பு தொடர்பான உண்மைகளை முன்வைக்கின்றன. மேலும், ஆய்வுகள் வாசகரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றன, அவை தெளிவாக ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் தவறாக வழிநடத்தும் புகையிலை நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட வாதங்கள்.

சிகரெட் மீதான வரி அதிகரிப்பால், நுகர்வோர் மீண்டும் மலிவு விலையில் மாற்று வழிகளுக்குத் திரும்புவார்கள். இது சட்டவிரோத சிகரெட் வர்த்தகம் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும், இதனால் அரசுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், வரி உயர்த்தப்பட்டாலும், அரசின் வருவாய் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

மேலும், இலங்கையில் சிகரெட் உற்பத்திப் பொருட்களின் கடத்தல் 20 சத வீதத்துக்கும் அதிகமாக இருப்பதாக அறிக்கைகள் காட்டுகின்றன. ஆனால், இந்த தரவுகள் புகையிலை நிறுவனம் மற்றும் சந்தை ஆதாரங்களால் உருவாக்கப்பட்ட தரவு என்பதுடன் தெளிவற்ற ஆதாரங்கள் இருப்பதனால் இந்த புள்ளிவிவரங்களின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க வேண்டியது அவசியம். துரதிஸ்டவசமாக, புகைபொருள் உற்பத்திக்குச் சாதகமான தரவை முன்வைக்கும் போக்குடன், அத்தகைய ஆதாரங்களை நம்புவதில் சிக்கல் உள்ளது. குறிப்பிட்ட இந்த ஆய்வுகளுக்கு யார் நிதியுதவி அளித்துள்ளனர் என்பதும் சந்தேகமாக உள்ளது.

மாறாக, உத்தியோகபூர்வ சுங்கப் புள்ளிவிபரங்கள் கடத்தப்பட்ட சிகரெட்டுகளில் 1 சதவீதத்துக்கும் குறைவானவை கைப்பற்றப்பட்டதாக வெளிப்படுத்துகின்றன. கடத்தல் சம்பவங்கள் மேலே குறிப்பிடப்பட்ட 20 சதவீதமாக இருந்தால், சட்டவிரோத சிகரெட் உற்பத்திப் பொருட்களின் வர்த்தகத்தை ஊக்கப்படுத்துவதையும் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான வலுவான தேவையை இது முன்வைக்கிறது.

கிடைக்கக்கூடிய பிற தரவு மற்றும் தகவல்களுக்கு இணங்க, வரி மற்றும் விலை ஏற்ற இறக்கங்கள் சிகரெட் பொருட்களின் கடத்தலுக்குப் பின்னால் ஒரே ஒரு காரணியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பது தெளிவாகிறது. இந்த காரணிகளில் பல்வேறு நாடுகளுக்கு இடையே சட்டப்பூர்வ சிகரெட் பொருட்களின் விலையில் ஏற்படும் மாறுபாடுகள் மற்றும் சிகரெட் கடத்தலுக்கான போதுமான அபராதம் ஆகியவை அடங்கும். எனவே, சிகரெட் பொருட்களின் கடத்தலுடன் தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவற்றைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

மேற்கூறியவைகளுக்கு மேலதிகமாக, சிகரெட்/ புகையிலை பொருட்கள் மீதான சட்டவிரோத வர்த்தகத்தை ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையில் 8 பெப்ரவரி 2016 அன்று இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது. இதன் விளைவாக, அனைத்து ஆட்கடத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைக்கச் செயலூக்கமான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட வேண்டும். அதன்படி, சட்டவிரோத சிகரெட் /புகையிலை பொருட்களை அகற்ற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு என்பதை வலியுறுத்துகிறோம்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC)

# கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவு



கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு "Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)" திட்டத்தின் கீழ், நிதி உதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சமூக ஒருங்கிசைவுக்கான டெல்வொன் உதவி (DASH) அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி உடன் கைச்சாத்திட்டிருந்தார். இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வட மாகாணத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்காக GGP திட்டத்தினூடாக DASH அமைப்புக்கு 364,963 அமெரிக்க டொலர்களை (சுமார் ரூ.116 மில்லியன்) தொகையை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான மீட்சி மற்றும் ஒருமைப்பாட்டு செயன்முறையில் ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவளிப்பதுடன், 2027ஆம் ஆண்டளவில் கண்ணிவெடி பாதிப்பற்ற நாடாக இலங்கையை மாற்றும் இலங்கையின் இலக்குக்கும் ஆதரவளிப்பதாகத் தூதுவர் மிசுகொஷி குறிப்பிட்டார்.

இந்த நன்கொடையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் சந்திரசிறி குறிப்பிடுகையில்,

"இலங்கையின் நீண்ட கால நண்பரும், கண்ணிவெடி அகற்றும் பணிகளில் பாரிய நன்கொடை வழங்குநராகவும் ஜப்பான் திகழ்வதுடன், 2010ஆம் ஆண்டு முதல் DASH க்கு தொடர்ச்சியாக நிதியளிப்புகளை வழங்கியுள்ளது. ஆயிரக் கணக்கானவர்களைப் பாதுகாப்பாக உயிர்வாழ்வதற்கு இந்த ஆதரவு உதவியுள்ளதுடன், தொடர்ச்சியான உதவியுடன், கண்ணிவெடிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், DASH க்கான ஜப்பானின் உதவி தொடர்வதுடன், பலருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அனுகூலமளிக்கின்றது. ஜப்பானுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். ஜப்பான் மற்றும் இதர தரப்பினரால் நிதியளிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளம் மக்களை ஒன்றிணைப்பதுடன், சமாதானம் மற்றும் மீள உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது" என்றார்.

GGP திட்டத்தின் கீழ் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபடும் நான்கு அமைப்புகளுக்கும் ஜப்பான் தொடர்ச்சியாக ஆதரவளித்துள்ளதுடன், 2002ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு நீண்ட காலமாக ஆதரவளிக்கும் நன்கொடை வழங்குநராகத் திகழச் செய்துள்ளது. ஜப்பானின் மனிதநேய செயற்பாடுகளுக்கான ஜப்பானின் மொத்த உதவி 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமானதாகும்.

DASH இனால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 6,000 க்கும் அதிகமான மக்களை மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார ஆதரவு வழங்கல் போன்றவற்றுக்குப் பங்களிப்பு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு

# பிளாட்டினம் விருது இலங்கையின் பசுமை

கட்டிடச்சபையினால் (GBCSL) கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு பிளாட்டினம் விருது வழங்கப்பட்டுள்ளது.

GBCSL இன் 2023 விருதுகள் வழங்கும் நிகழ்வில், கொமர்ஷல் வங்கிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. கவுன்சிலின் பசுமை வணிகத் தலைமை விருது 2023இல் வங்கித்துறையில் கௌரவமான குறிப்பையும் பெற்றது.

யாழ்ப்பாண கிளை GBCSL விருதைப் பெறும் மூன்றாவது கொமர்ஷல் வங்கிக் கிளையாகும். 2022ஆம் ஆண்டில், வங்கியின் திருகோணமலைக் கிளை கோல்ட் தர மதிப்பீட்டு விருதைப்பெற்றது, 2020ஆம் ஆண்டில், வரலாற்று சிறப்புமிக்க காலி கோட்டையில் உள்ள கொமர்ஷல் வங்கி கட்டிடம் பிளாட்டினம் மதிப்பீட்டு விருதை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலக்கம் 474, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையை உள்ளடக்கிய கட்டிடம், 1973ஆம் ஆண்டு, இந்திய மெர்கன்டைல் வங்கியின் (எம்பிஐ) மூன்று கிளைகளை வங்கி கையகப்படுத்தியபோது, வங்கியின் வசம் வந்தது. இது 2020-21இல் சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்பாடுகளுக்காக மீண்டும் கட்டப்பட்டு வடிவமைக்கப்பட்டது.

வங்கியின் இந்த கட்டிடம்-100kW சூரிய கூரை அமைப்புடன் பொருத்தப்பட்டுள்ளது, இது தேவையான மின்சாரத்தில் பெரும் சதவீதத்தை உற்பத்தி செய்கிறது. அத்தோடு, ஒரு மழைநீர் சேகரிப்பு வசதி, தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக கழிவு நீரை மறுசுழற்சி செய்யும் அதன் சொந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு முகாமைத்துவ அமைப்பு இவற்றோடு பகல் நேரத்தில் இயற்கை ஒளியை அதிகப் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் ஆற்றல் நுகர்வை குறைப்பதுடன் ஆற்றல்-திறனுள்ள குளிரூட்டியுடன் பொருத்தப்பட்டுள்ளது, மேலும் குளியலறையில் உள்ள பாகங்கள் அனைத்தும் நீர்-திறனுள்ளவை, கட்டிடத்தின் 'பசுமை' சான்றுகளை மேம்படுத்துகின்றன. கூடுதலாக, அதன் கட்டுமானத்தின் போது பச்சை-முத்திரையிடப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

GBCSL பசுமை வணிகத் தலைமை விருது, அதன் பசுமை வங்கி நடைமுறைகள், பசுமைச் சான்றிதழ்கள், செயல்பாட்டில் உள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள், CSR மற்றும் வங்கி ஈடுபட்டுள்ள தன்னார்வச் செயல்பாடுகள் உட்பட, நிலைபெறுதகு தன்மைக்கான கொமர்ஷல் வங்கியின் உறுதிப்பாட்டின் பல அம்சங்களை அங்கீகரிக்கிறது.

நிலைபெறுதகு தன்மை தொடர்பான வெளியீடுகள், வங்கியால் நடத்தப்படும் பசுமைக் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சுற்றுச்சூழல் மற்றும் நிலையான கட்டமைக்கப்பட்ட சூழல் தொடர்பான கண்டுபிடிப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களிடையே பசுமைக் கருத்துகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக வங்கி விருதுளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





**"எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"**

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :.............................................
மாகாணம் :.......................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**.......................................................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**.......................................................................................................

**மாகாணம் :**.......................................................................................................

**வீட்டு முகவரி :**.......................................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**..........................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**.......................................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..................................................
அதிபரின் கையொப்பம்

பீஜிங்

# ‘வீடு வாங்கினால் மனைவி இலவசம்’



இன்றைய நவீன உலகில் பொருட்களை விற்பனை செய்ய நிறுவனங்கள் பல்வேறு உத்திகளை கையாளுகின்றன. அதில் விளம்பரம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது கவர்ச்சியான விளம்பரங்கள் மூலம் மக்களை ஈர்க்கும் முயற்சியில் நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சீனாவில் ரியல் எஸ்டேட் துறை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. இதனால் பல நிறுவனங்கள் விநோதமான விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன.

அந்தவகையில், சீனாவின் டிரையஜின் நகரில் உள்ள ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனமும் தனது வீடுகளை விற்பனை செய்ய வித்தியாசமாக விளம்பரம் செய்துள்ளது. குறித்த விளம்பரம் மக்களின் கவனத்தை ஈர்த்தது மட்டுமின்றி, அரசாங்கத்தின் கவனத்தையும் தன்பக்கம் இழுத்தது.


அது என்னவெனில், வீடு வாங்கினால் மனைவி இலவசம் என்று சமூகவலைதளங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் விளம்பரம் செய்துள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த சமூக ஆர்வலர்கள் அந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்துக்கு புகார் அளித்தனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட ரியல் எஸ்டேட் நிறுவனத்துக்கு சுமார் ரூ.3 லட்சம் அபராதம் விதித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வீடுகளை வாங்கி உங்களது மனைவிக்கு கொடுங்கள் என்ற தங்களது விளம்பரம் தவறான அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட்டு இருக்கிறது என கூறப்பட்டுள்ளது.

மெக்சிகோ சிட்டி

விமானத்தின் அவசரகால கதவை திறந்து

## இறக்கை மீது நடந்த பயணி



மெக்சிகோ சிட்டி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கவுதமாலா நாட்டிற்கு ஏரோமெக்சிகோ பயணிகள் விமானம் வெள்ளிக்கிழமை (26) புறப்பட தயாராக இருந்துள்ளது. ஆனால், பயணிகள் ஏறி அமர்ந்து நீண்ட நேரமாகியும் புறப்படவில்லை. பராமரிப்பு பணி தொடர்பான எச்சரிக்கை காரணமாக புறப்படுவதில் தாமதமாகியுள்ளது.

இந்நிலையில், விமானத்தில் இருந்த பயணிகளில் ஒருவர், அவசரகால கதவை திறந்துகொண்டு வெளியேறி, விமானத்தின் இறக்கையில் நடந்து சென்றுள்ளார். பின்னர் அவரை விமான நிலைய ஊழியர்கள் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

ஆனால், அவர் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறி, அவருக்கு ஆதரவாக சக பயணிகள் குரல் கொடுத்துள்ளனர். விமானம் தாமதமானதால் கிட்டத்தட்ட 4 மணி நேரம் காற்றோட்டம் இல்லாமல் தவித்த நிலையில், அந்த பயணி அனைவரையும் பாதுகாப்பதற்காகவே அவசரகால கதவை திறந்தார் என்று கூறியுள்ளனர். இதுதொடர்பாக ஏராளமான பயணிகள் எழுதி கையெழுத்திட்ட அறிக்கை மற்றும் புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் நிமோனியா:

## 240க்கும் அதிகமான குழந்தைகள் பலி

பாகிஸ்தான்- பஞ்சாப் மாகாணத்தில் நிமோனியா பாதிப்பு வேகமாக பரவி வருகிறது.

பாகிஸ்தானில் தற்போது நிலவி வரும் கடும் குளிர் காரணமாக நிமோனியா பரவல் மேலும் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுனர். பஞ்சாப் மாகாணத்தில் கடந்த ஒரே மாதத்தில் 244 குழந்தைகள் நிமோனியா பாதிப்பால் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பஞ்சாப் மாகாணத்தில் புதிதாக 942 பேருக்கும், லாகூரில் 212 பேருக்கும் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நிமோனியா பரவலை கட்டுப்படுத்த பாகிஸ்தான் சுகாதாரத்துறை பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

புவனேஸ்வர்

# ட்ரோன் மூலம் இரத்தம் அனுப்பிய மருத்துவமனை



ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை, மருந்து, இரத்தம் ஆகியவற்றைப் பிற சுகாதார மையங்களுக்கு விரைவாக அனுப்பி வைக்க ஏதுவாக ட்ரோன் சேவையை அறிமுகம் செய்துள்ளது. இதன்படி, முதல் ட்ரோன் சேவை மூலம் கோர்தா மாவட்டத்தில் உள்ள டாங்கி சமுதாய சுகாதார மையத்துக்கு ரத்தம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

12 கிலோ எடை கொண்ட இந்த ட்ரோன், 2 முதல் 5 கிலோ கிராம் வரையிலான மருந்துகளை எடுத்துச் சென்று விநியோகிக்கும் திறன் வாய்ந்தது. மணிக்கு 90 கி.மீ. வேகத்தில் செல்லும் இதில் ஜிபிஎஸ் தொழில்நுட்பமும் பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மருந்து பொருட்களைக் குறித்த நேரத்தில் விநியோகம் செய்ய முடியும். எய்ம்ஸ் மருத்துவமனைக்காக, ஸ்கை ஏர் மொபிலிட்டி நிறுவனம் ட்ரோன் சேவையை வழங்குகிறது.

இதுகுறித்து எய்ம்ஸ் வெளியிட்ட அறிக்கையில், “நாட்டிலேயே முதல் முறையாக ட்ரோன் மூலம் இரத்தம் வெற்றிகரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த ட்ரோன் 60 கி.மீ. தூரத்தை 35 நிமிடங்களில் கடந்து இரத்தத்தை விநியோகம் செய்தது” என கூறப்பட்டுள்ளது.

புது டெல்லி

மருத்துவமனையில் கேட்பாரற்ற

## 4,000 உடல்களுக்கு இறுதிச் சடங்கு செய்த இளம்பெண்



புதுடெல்லி-ஷாத்ரா பகுதியைச் சேர்ந்தவர் பூஜா சர்மா (26). இவர் மருத்துவமனைகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று இருக்கும் உடல்களைப் பெற்று அவற்றுக்குக் கண்ணியமான முறையில் இறுதிச் சடங்குகள் செய்து வருகிறார்.

இதுகுறித்து பூஜா சர்மா கூறும்போது, “கடந்த இரண்டு ஆண்டுகளில், குடும்பம் அல்லது கேட்பாரற்ற நிலையில் இருந்த சுமார் 4,000 உடல்களுக்கு இறுதிச் சடங்குகளை செய்துள்ளேன்.

30 வயதான எனது மூத்த சகோதரர் ஒரு சிறிய சண்டையில் என் முன்னே சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த செய்தியைக் கேட்டதும், என் தந்தை, கோமா நிலைக்கு சென்றார். தனது சகோதரனுக்கான இறுதிச்சடங்குகளை நானே செய்தேன். அப்போதிருந்து இந்த சேவையை செய்து வருகிறேன்.

ஆரம்பத்தில் குடும்பங்கள் அல்லது கேட்பாரற்ற உடல்கள் பற்றிய தகவல்களைப் பெற நான், பொலிஸார் மற்றும் அரசு மருத்துவமனைகளைத் தொடர்புகொண்டேன். அதன் பின்னர் இப்போது பொலிஸ் மற்றும் அரசு மருத்துவமனைகள், கேட்பாரற்ற உடல்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் என்னைத் தொடர்பு கொள்கின்றன. இந்த பணிகளை செய்வதற்காக பல சவால்களை எதிர்கொண்டு வருகிறேன் என்றும் கூறியுள்ளார்.

# அவுஸ்திரேலியாவை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றிருந்த நிலையில், பிறிஸ்பேணில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்றதன் மூலம் தொடர் 1-1 என சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 311/10 (துடுப்பாட்டம்: ஜோஷுவா டா சில்வா 79, கவெம் ஹொட்ஜ் 71, கெவின் சின்கிளேயர் 50, அல்ஸாரி ஜோசப் 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 4/82, ஜொஷ் ஹேசில்வூட் 2/38, நேதன் லையன் 2/81, பற் கமின்ஸ் 1/76)

அவுஸ்திரேலியா: 289/9 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 75, அலெக்ஸ் காரி 65, பற் கமின்ஸ் ஆ.இ 64 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 4/84, கேமார் றோச் 3/47, கெவின் சின்கிளேயர் 1/53, ஷாமர் ஜோசப் 1/56)

மே. தீவுகள்: 193/10 (துடுப்பாட்டம்: கேர்க் மக்கென்ஸி 41, அலிக் அதனஸே 35, ஜஸ்டிக் கிறேவ்ஸ் 33, கவெம் ஹொட்ஜ் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 3/23, நேதன் லையன் 3/42, மிற்செல் ஸ்டார்க் 1/45, கமரொன் கிறீன் 1/37)

அவுஸ்திரேலியா: 207/10 (வெ.இ: 216 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் ஆ.இ 91, கமரொன் கிறீன் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷாமர் ஜோசப் 7/68, அல்ஸாரி ஜோசப் 2/62, ஜஸ்டின் கிறேவ்ஸ் 1/46)

போட்டியின் நாயகன்: ஷாமர் ஜோசப்

தொடரின் நாயகன்: ஷாமர் ஜோசப்



பருவகால முடிவில்

## விலகும் பார்சிலோனா முகாமையாளர் ஸ்கெவி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முகாமையாளரான ஸ்கெவி, பருவகால முடிவில் பதவி விலகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்றிருந்த ஸ்கெவி, கடந்த பருவகாலத்தில் பார்சிலோனாவுக்கு பட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தாலும் தற்போது லா லிகா புள்ளிகள் பட்டியலில் முதலிடத்திலுள்ள றியல் மட்ரிட்டை விட 10 புள்ளிகள் குறைவாக பார்சிலோனா பெற்றுள்ளது.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## வில்லாறியலிடம் தோற்ற பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற வில்லாறியலுடனான போட்டியில் 3-5 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா தோற்றது.

பார்சிலோனா சார்பாக இல்கி குன்டோகன், பெட்ரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. வில்லாறியல் சார்பாக, ஜெராட் மொரெனோ, இலியாஸ் அக்ஹொமச், கொன்கலோ குயெடெஸ், அலெக்ஸான்டர் சொர்லொத், ஜொஸே லூயிஸ் மொராலெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 54 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் காணப்படுகின்றது. 52 புள்ளிகளுடன் ஜிரோனா இரண்டாமிடத்திலும், 44 புள்ளிகளுடன் பார்சிலோனா மூன்றாமிடத்திலும், 41 புள்ளிகளுடன் அத்லெட்டிகோ மட்ரிட் நான்காமிடத்திலும் காணப்படுகின்றன. 41 புள்ளிகளுடன் அத்லெட்டிக் பில்பாவோ காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் ஐந்தாமிடத்தில் காணப்படுகின்றது. இதில் அத்லெட்டிகோ மட்ரிட் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் ஜுவென்டஸ் எம்போலி போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற எம்போலியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஸன் விளாகோவிச் பெற்றதோடு, எம்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை டொம்மஸோ பல்டன்ஸி பெற்றிருந்தார்.

தேசங்களின் ஆபிரிக்கக் கிண்ணத் தொடர்:

## காலிறுதியில் நைஜீரியா



தேசங்களின் ஆபிரிக்கக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நைஜீரியா தகுதி பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற கமரூடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு நைஜீரியா தகுதி பெற்றுள்ளது.

நைஜீரியா சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அடெமொலா லுக்மன் பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 29 , ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.